## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 27/2024 | வா.சா. | : 1 |
| பெயர் | : பசுபதி | த/பெ. | : ராமசந்திரன் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : ஊராளிபட்டி |
| தேதி | : 16.10.2024 | வயது | : 44/2024 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11:29 A.M. - 11:38 A.M.

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது தரப்பு முதல் சாட்சியாவேன். இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரியும், பாகப்பிரிவினை கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு இவ்வழக்கு பற்றிய விபரங்கள் நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.1 - 24.06.1929 ம் தேதியிட்ட பூச்சி கவுண்டர் வகையறா எழுதிக்கொடுத்த பாகப்பத்திரம் - இணையதள சான்றிட்ட நகல்.

வா.சா.ஆ.2 – 13.09.2007 தேதியிட்ட பிரதிவாதிகள் வழக்குச் சொத்து சம்பந்தமாக எழுதிய தானசெட்டில்மெண்ட் ஆவணம் - இணையதள சான்றிட்ட நகல்.

வா.சா.ஆ.3 - 29.06.2024 ம் தேதியிட்ட பிரதிவாதிகளுக்குஅனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல்.

வா.சா.ஆ.4 – 01.07.2024 ம் தேதி அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை - அசல் (2 எண்ணிக்கை)

( மேற்படி ஆவணங்கள் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரை குறியீடு செய்யப்படுகிறது. )

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 16.10.2024 கையெழுத்து செய்துள்ளார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2024.10.16 16:42:32 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.